ஆரம்பிக்கப்பட இருப்பதாக இதே அவையில் அறிவிக்கப்பட்டதே. அதனுடைய நிலை தற்போது என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

திண்டிவனம் பகுதியில் வனஸ்பதி தொழிற்சாலை.

வினா எண் 159. திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனம் பகுதியில் அரசு துறையில் வனஸ்பதி தொழிற்சாலை துவக்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : வனஸ்பதி தொழிற்சாலை துவக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனம் பகுதியில் தான் அதிக அளவு நிலக்கடலை கிடைக்கிறது. இதற்கு முன்னால் இல்லாவிட்டாலும் இனியாவது அந்த மாதிரி வனஸ்பதி தொழிற்சாலையை ஆரம்பிப்பார்களானால் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதோடு மக்களுக்குக் குறைந்த விலையில் வனஸ்பதி கிடைக்கும். அரசு இனியாவது அது பற்றிப் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : வனஸ்பதி தொழில் பற்றிய மத்திய அரசின் கொள்கையினால் இது அவர்களுடைய புலனாய்வில் இருக்கிறது. தற்போது வனஸ்பதி தொழில் தொடங்குவது பற்றிய விண்ணப்பங்களை மத்திய அரசு ஏற்றுக் கொள்வதில்லை. எனவேதான், அது போன்ற திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

கடலூரில் உரத் தொழிற்சாலை.

வினா எண். 160—திரு. பாபு கோவிந்தராசன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கடலூரில் மிகப் பெரிய உரத் தொழிற்சாலை துவக்குவதற்கான திட்டம் உள்ளதா ?

1981 பிப்ரவரி 4]

(ஆ) ஆம் எனில் திட்டம் தற்பொழுது எந்நிலையிலுள்ளது? எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

வெள்ளாம்பிக் காலனி பழங்குடி மக்கள் பகுதிக்கு மின் வசதி

*வினா எண். 161—திரு. டி. மணி: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) குமரி மாவட்டத்தில் வெள்ளாம்பிக் காலனியில் குடியிருக்கும் பழங்குடி மக்களின் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) மின் வசதி செய்து கொடுக்க நடவடிக்கைகள் ஏதேனும் எடுக்கப்பட்டுள்ளதா?

(இ) வெள்ளாம்பிக் காலனியில் குடியிருக்கும் பழங்குடி மக்களின் குடியிருப்புகளுக்குச் செல்லும் பாதையில் தெரு விளக்குகள் போடப்பட்டுள்ளதா?

(ஈ) ஆம் எனில், அவை எரிவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இக் கேள்விக்கிடமில்லை.

(இ) ஆம். 7 குமிழ் விளக்குகள் போடப்பட்டுள்ளன.

(ஈ) எல்லா விளக்குகளும் தற்போது எரிகின்ற நிலையில் உள்ளது.

திரு. டி. மணி: குமரி மாவட்டத்தில் வெள்ளாம்பிக் காலனியில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னால் பழங்குடி மக்களுக்கு கட்டிக் கொடுத்த குடிசைகளுக்கு மின் விளக்குகள் போடப்படவில்லை,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS